3rd September 1959]

Sri S. M. ANNAMALAI : " க்ராஜுவேட் கான்ஸ்டிட்டியுயன்ஸி " என்ற ஒரு தொகுதி இருக்கும்போது ஆரம்ப ஆசியர்களுக்கு ஏன் அந்தச் சலுகையை அளிக்கக்கூடாது ? அவ்விதச் சலுகையை இவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதற்கு அரசியல் சட்டத்திலேயே விதி இருக்கிறது. அரசியல் சட்டத்தை மாற்றினுல்தான் ஆரம்ப ஆசிரியர்களுக்கு நாம் பிரதிநிதித்துவம் கொடுக்க முடியும். இப்போது அரசியல் சட்டத்தை அவ்வாறு மாற்றுவதாக ஆலோசனை இல்லை.

" Royal trees "

* 109 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : **Will the** Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the classification of Royal trees exists anywhere in our State;

(*b*) if so, what are the trees that come under this classification; and

(*c*) what the conditions that are imposed under this classifition?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The classification of Royal trees exists in certain places in Kanyakumari district and in Shencottah taluk of Tirunelveli district.

(*b*) Teak, blackwood, ebony and sandal wood, whether grown or found on Government land or private property are Royal trees.

(*c*) All these trees are the property of the Government and no trade shall be carried on in them without the sanction of the State Government.

Sri K. SATTANATHA KARAYALAR : கேரளாவில் இந்த ட்ரான்ஸ்பெர்டு ஏரியாவுடன் இருந்த பகுதிகளிலுள்ள அரசாங்க மரங்களை யெல்லாம் ஒரு காலவரம்பு வைத்து அங்குள்ளவர்களின் சொந்த மரங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதேபோல நமது ராஜ்ய அரசாங்கத்தார் செய்யத் தயாராயிருக்கிறார்களா, அல்லது சர்க்கார் மரங்களாகவே கருதப் படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்போது " என்யூமெரேஷன் ஒர்க் " நடக்கிறது. ஆகையால் அந்த வேலை முடிகிறவரையில், அதாவது 31–1–1961 வரையில் அவர்களுக்கு இந்த மனுபலி ரைட்ஸை கொடுக்காமல் இருக்கலாம் என்பது அரசாங்கத்தின் முடிவு.

Increased water-supply for Coonoor

* 110 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any Engineer was deputed to Coonoor Municipality to conduct investigation for the increased supply of water;

(*b*) whether the Engineer has submitted any report; and

(*c*) if so, the details of the same?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

[3rd September 1959

Sri J. MATHA GOWDER : கூனூர் சுகவாச ஸ்தலமாக இருப்பதால் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதில் அதற்கு முதலிடம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? இரண்டு தினங்களுக்கு முன்பு கூட அந்த நகரசபையினர் சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். எனவே அங்கே இது சம்பந்தமாக இன்வெஸ்டிகேஷன் செய்ய சீக்கிரம் எஞ்சினியர்களை அனுப்பவாவது சர்க்கார் முன்வருவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது இங்கே ஒவ்வொரு நபருக்கும் 20 காலன் தண்ணீர் வசதி இருக்கிறது. அங்கே சாதாரணமாக தண்ணீர் கஷ்டம் இல்லை. எப்போதாவது மழையில்லாமல் ரொம்பக் கஷ்டமாக இருக்கும்போதுதான் தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. இருந்தாலும், ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 10 லட்ச ரூபாய் செலவில் அங்கே தண்ணீர் வசதி செய்துகொடுக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

Executive Officers of temples

* 113 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to give pension or contributory provident fund to the Executive Officers of temples?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : In the Hindu Religious and Charitable Endowments Bill before the House, it is proposed to make Executive Officers, Government servants. This will make the Executive Officers eligible for pension.

Sri K. VINAYAKAM : Was any representation to this effect made to the Hon. Minister when he inaugurated the Conference of Executive Officers recently in the City of Madras?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I did not have any personal representation when I attended that conference.

Sri V. SANKARAN : சபாநாயகர் அவர்களே, சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக அவர்களை ஏற்றுக்கொள்ளும்போது ஏற்கனவே ரிடையர் ஆனவர்கள், சமீபத்தில் ரிடையர் ஆகிறவர்களுக்கு என்ன நிலைமை ஏற்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர் செலக்ட் கமிட்டியில் கூட இருந்தார்கள். ஏதேனும் யோசனை இருந்திருந்தால் அப்பொழுதே தெரிவித்திருக்கலாம்.

Sri A. VEDARATHNAM : இப்பொழுது அந்தச் சட்டத்தில் " இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பென்ஷன் கொடுக்கப்படும் " என்ற நிலை இருக்கிறது. அந்தக் காலம்வரை அவர்களுக்கு ஏதேனும் பரிகாரம் கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த மசோதா இந்த மன்றத்தின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்படும். அப்பொழுது வேறு என்னென்ன செய்ய வேண்டுமென்று கனம் அங்கத்தினர்களுக்குத் தோன்றுகிறதோ அவைகளைச் சொன்னால் அப்பொழுது யோசிக்கலாம்.

Sri K. VINAYAKAM : Regarding the provisions made in the Bill that is to be discussed here, there is no mention made except with regard to the appointment of these executive officers and their powers. No provision has been made regarding their pension